செய்தி வெளியீடு எண்: 04 நாள்: 03.04.2018

***தேனி மாவட்டம்,***
***உணவு பொருட்களின் தரம் குறித்த புகார்களை***
***பொதுமக்கள் தெரிவிக்கலாம்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-***

உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச்சட்டம் 2006 விதிகள் 2011-ன்படி, உணவு பொருட்கள் தயாரிப்பவர்கள் மற்றும் வணிகர்கள் அரசு பதிவுச்சான்றிதழ் மற்றும் உரிமம் பெற்றிருக்க வேண்டும். உணவுபாதுகாப்பு பதிவு சான்றோ அல்லது உரிமமோ பெறப்படாத உணவு தயாரிப்பு மற்றும் விற்பனை இடங்கள் கண்டறியப்பட்டால் உணவுபாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச்சட்டம் 2006 விதிகள் 2011-ன்படி (சட்டத்தின் பிரிவு 63-ன் கீழ்) நடவடிக்கை எடுக்கப்படும். இச்சட்டத்தின்படி அதிகபட்சமாக ஆறு மாத சிறை தண்டனை மற்றும் ரூ.5 இலட்சம் அபராதமும் விதித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், உணவுபாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச்சட்டம்-2006 (FSSAI) முத்திரையுடன் உணவு பாதுகாப்பு உரிமம் எண் முத்திரையிடாத உணவு பொட்டலங்களை வணிகர்கள் தயாரிப்பதோ, விற்பனை செய்வவோ கூடாது. முத்திரையிடப்படாத உணவு பொருட்களை பொதுமக்கள் வாங்கி உபயோகப்படுத்துவதை தவித்திட வேண்டும். பாட்டில் மற்றும் கேன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் குடிநீரில் உணவுபாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச்சட்டம்-2006 (FSSAI) மற்றும் ISI முத்திரை உள்ளதா என கண்டறிந்து பயன்படுத்திட வேண்டும்.

நுகர்வோர்கள் உணவு தரம் குறித்த புகார்களை **94440 42322** என்ற கைபேசி எண்ணிற்கு வாட்ஸ்அப் வாயிலாக தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**